சங்க இலக்கியத்தில் வாழ்வியல் அறம்

ம. கீதா / M. Geetha*
Assistant Professor (SS), Department of Tamil,
Avinashilingam Institute for Home Science and Higher Education for Women,
Coimbatore, TamilNadu - 641 043, India.
mgeethaphd@gmail.com

Manuscript received 16 Septemmber 2025
Manuscript accepted 30 October 2025
*Corresponding author / First Author

ஆய்வுச் சுருக்கம்

சங்க காலத்தில் தமிழர்களின் வரலாறும், பண்பாடும் தலைசிறந்து விளங்கின. ஒரு நாட்டின் வரலாறும், மக்களின் வாழ்க்கை முறைகளும் அரசனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பும் இலக்கியங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகின்றது. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் எனப்படும். மனித வாழ்வை செழுமையாக்குபவை அறப் பண்புகள். அந்த வகையில் காலந்தோறும் தமிழில் அறக்கருத்துக்களைக் கூறும் இலக்கியங்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. 'சங்க இலக்கியத்தில் வாழ்வியல் அறம்' என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் முன்னுரை, அறம் - சொற்பொருள் விளக்கம், வாழ்வியல் அறம், இல்லறம், விருந்தோம்பல் பண்பு, கல்வி முறை, ஈகைச் சிறப்பு, வணிகர்களின் அறம் ஆகிய துணைத் தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவில் முடிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்: *அறம்* - இல்லறம் - விருந்தோம்பல் - கல்வி - ஈகை - போர் - வணிகம்.

Abstract

The history and culture of the Tamils during the Sangam period were outstanding. The history of a country, the lifestyle of the people and the relationship between the king and the people can be known through literature. The set of moral systems that a person has defined for himself is called virtue. Virtuous qualities enrich human life. In that way, literature that expresses the concepts of virtue has been appearing in Tamil from time to time. The research article titled 'Virtue of Life in Sangam Literature' has been examined under the sub-topics of introduction, virtue - definition of meaning, virtue of life, homeliness, hospitality, education system, charity, and virtue of merchants. A conclusion is given at the end of the article.

Keywords: *Virtue - Domesticity - Hospitality - Education - Charity - War – Trade*

முன்னுரை

உலகின் பிற செம்மொழிகளில் இருந்து தனிச்சிறப்பான செவ்வியல் பண்புகளைப் பெற்றிருப்பது தமிழ் மொழியாகும். மனித இனத்தின் கூட்டு வாழ்க்கை சமுதாயம். அதன் அங்கமாக விளங்குகின்ற தனிமனிதனுக்கு இன்பத்தையும், இன்பம் சார்ந்த அறவொழுக்க நெறியையும் உணர்த்துவதே நல்ல இலக்கியத்தின் பண்பாகும். மனித இனத்தின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மனித சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே அறமாகும். உலகில் மக்களாய் பிறந்தார்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் உறுதிப் பொருள்களென உயர்ந்தோரால் உணர்த்தப்பட்டுள்ளது. மனித வாழ்வு என்பது பிறழ்வு இல்லாத ஒழுக்க நெறியில் தாமும் வாழ்ந்து, ஏனைய உயிர்களையும் வாழ வைப்பதாகும். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடுகளும், சட்டதிட்டங்களும் அக்காலத்தில் வழக்கில் இருந்த நிலையை இலக்கியங்கள் நுட்பமாகவும்,

செறிவாகவும், எளிமையாகவும் எடுத்துரைத்துள்ளன. அந்த வகையில் மனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறக்கருத்துகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

அறம் - சொற்பொருள் விளக்கம்

அறம் என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் Ethics என்பதாகும். Ethos என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து Ethics என்ற சொல் வந்தது என்பர். அறம் என்பதற்கு ஈகையறம், கருமம், நீர்மை, நூல் பயன் எனும் பொருளைத் தமிழ் மொழி அகராதியும் தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, வசைக்கவி, யமன், புனிதம், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம், இன்சொல், இல்வாழ்க்கை எனும் பொருள்களை மதுரைத் தமிழ்ப்பேரகராதியும் தனிமனிதனின் வாழ்வும் பொது வாழ்வும் சீராக இயங்க தனிமனிதன், அரசு போன்றவைகள் கடைபிடிக்க வேண்டிய அடிப்படையிலான நெறிமுறைகள் அல்லது கடமைகள் எனும் பொருளைக் க்ரியாவின் தற்கால தமிழ் அகராதியும் விளக்கம் தருகின்றன.

வாழ்வியல் அறம்

சங்க கால இலக்கியங்களில் மனித வாழ்வும், மனித உணர்வும், மனித உறவும் பாடு பொருள்களாக இடம்பெற்றது. இயற்கையை அதன் அழகுக்காகவும் இலக்கியத்தின் சுவைக்காகவும் படைத்திடாமல் மனிதருடைய இன்ப துன்ப உணர்வுகள் குறித்து ஆராய்ந்து வாழ்வியலுக்கான அறங்களைப் படைத்தனர். தன்னலமின்றி பொதுநலம் பேணுவதே சிறந்த வாழ்வியல் அறமாகக் கருதினர். அத்தகைய வாழ்க்கை முறையை அகம், புறமெனப் பிரித்தனர். அக வாழ்வில் இல்லறம், விருந்தோம்பல் மற்றும் புற வாழ்வில் கூறப்படும் ஆட்சி முறை, கல்வி, ஈகை, நட்பு போர், தொழில், வணிகம் இவை அனைத்திலும் உள்ள ஒழுக்கங்களை உள்ளடக்கியதே வாழ்வியல் அறமாகும்.

இல்லறம்

அறத்தை இரண்டாகப் பாகுபாடு செய்வர். ஒன்று இல்லறம் மற்றொன்று துறவறம் ஆகும். இல்லறத்திலிருந்து அறச் செயல்களைச் செய்வது இல்லறமாகும். இல்லத்தில் ஒரு ஆண் அறத்தைச் செய்ய பெரிதும் துணை நிற்பவள் பெண் ஆவாள். இவ்வாறு செய்யும் அறத்தை,

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது *(குறள் - 45)*

என்று வள்ளுவர் கூறுவதன் மூலம் இல்வாழ்க்கை இன்புற அமைய பெரிதும் உதவுவது அன்பும் பிறருக்கு உதவும் அறமும் ஆகும் என்பது நன்கு புலனாகின்றது. இல்லறம் நல்லறமாக அமைவதே சிறப்பாகும். இதனை,

> மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு
> மருவின் இனியவு முளவோ *(குறுந்தொகை - 322)*

எனும் பாடல் அடியின் வழிகற்பு வாழ்வில் தலைவி மனையறம் புரிதலையும், தலைவன் வினையறம் புரிதலையும் இல்லத்தின் அறம் என்பது உணர்த்தப்படுகின்றது. இன்றைய இல்லற வாழ்வானது மாறுபட்டு காணப்படுகின்றது. சங்ககால மக்கள் இல்லற வாழ்வைச் சிறந்த அறமாகக் கருதி வாழ்ந்தார்கள். தற்காலத்தில் பெண்கள் கல்வி கற்று ஆண்களுக்கு நிகரான பதவிகளை வகிக்கின்றனர். எனவே தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப இல்லற வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். அவர்களின்

விருப்பத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப குடும்ப வாழ்வும், உறவுகளும் பெரிதும் மாற்றம் பெற்று விட்டதைக் காண முடிகின்றது. கணவன் மனைவி இருவரும் மனம் ஒன்றுபட்டு புரிதலுடன் வாழும் இல்லற வாழ்வு என்பது இன்றைய காலகட்டத்தில் குறைந்து வரும் நிலையில் இக்கால இல்லறம் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

விருந்தோம்பல் பண்பு

இல்லறம் சிறப்பாக அமைய கணவன் மனைவி இருவரும் இணைந்து விருந்தோம்பும் பண்பே சான்றாகும். விருந்தோம்பல் என்பது தமிழரின் தலையாயப் பண்புகளில் ஒன்றாகும். வீட்டிற்கு வந்த விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உணவளிப்பது விருந்தோம்பல் பண்பாகும். இல்லற வாழ்வின் இணைப்புப் பாலமாக விருந்தினர் அமைந்துள்ளனர் என்பதனை,

கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்

கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
பருகுவன்ன வருகா நோக்கமோ" (பொருநர் ஆற்றுப்படை 74 - 78)

என்ற பாடலடிகள் மூலம் விருந்தினர்களிடம் நண்பர்கள் போல உரையாடி அவர்கள் நமக்கு நெருக்கமானவர்கள் என்று உணர வைத்து ஈன்ற கன்றிடம் காட்டும் பசுவின் அன்பைப் போல அவர்களிடம் அன்பைப் பரிமாறி, மனம் சிலிர்க்கும்படி அன்பால் நெகிழச் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

விருந்தோம்பலின் சிறப்பை உணராத இக்காலகட்டத்தில் விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு என்பது பொருத்தமானதாக மாறிவிட்டது. சங்க காலத்தில் விருந்தினர்கள் ஒருநாள் சென்றாலும் பல நாட்கள் சென்றாலும் அரசர்கள் முதல் நாள் போலவே புலவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று சிறப்பான விருந்து கொடுத்து உபசரித்தனர். ஆனால் தற்போது விருந்தினர்களின் வருகையும் உபசரிப்பும் நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றம் பெற்றுள்ளது. விருந்தினர்களின் வருகையால் குடும்பமே மகிழ்ச்சியுற்று வாழ்ந்த காலங்கள் இன்றைய சூழலில் மாறிவிட்டதைக் காண்கிறோம்.

கல்வி முறை

கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கண் போன்றது. போருக்கு முன்னுரிமை தந்த சங்க காலத்திலேயே கல்விக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. ஆசிரியருக்கு உடனிருந்து உதவியும் பொருள்களைக் கொடுத்தும் எப்படியாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்று புறநானூறு எடுத்துரைக்கின்றது. ஏனெனில் ஒரே வயிற்றில் பிறந்தோராக இருந்தாலும் கல்வி சிறப்பினால் தாயின் மனம் கூட சிறிது வேறுபடும் .தாய் அன்பு என்பது கலங்கமற்றது. அத்தகைய கலங்கமற்ற தாயன்பு கூட கல்வி அறிவுமிக்க மகனிடத்தில் அதிகமாகும் என்று அக் கல்வியின் சிறப்பு குறிப்பிடப்படுகின்றது. கல்வியினால் அரச உரிமையும், சான்றோனாகவும் மேம்பாடு அடைகிறான் .கல்வியின் இன்றியமையாமையை,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ்
செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே (புறம் - 183)

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் உணர முடிகின்றது. எல்லாச் செல்வங்களிலும் சிறந்த செல்வமாக கல்வி அன்றைய காலகட்டத்தில் இருந்து இன்று வரை சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. ஏனெனில் ஒரு சமுதாயம் வளர்ச்சி பெற வேண்டுமெனில் அங்கு கல்வி வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பது அவசியமாகின்றது.

ஈகைச் சிறப்பு

வாழ்வியல் அறங்களுள் ஈகையறம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பண்டையத் தமிழரின் வாழ்வியலில் தலை சிறந்த பண்பாக ஈகைப் பண்பு கருதப்படுகிறது. வறுமையில் வாடுவோர்க்கும் பொருள் வேண்டி வருவோருக்கும் பொருள் கொடுத்து உதவுவதுதான் ஈகையாகும். இதனை,

நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்

கடவன் பாரி கைவண் மையே (புறம் - 106)

என்ற பாடல் மூலம் நல்லது தீயது என்பது கடவுளுக்கு கிடையாது. அற்பமான எருக்கம் பூவைக் கடவுள் சூடிக் கொள்வார் . அதுபோல வேள்பாரி என்ற மன்னன் இரவலர்க்குத் தன் நாட்டை வழங்கினான். எஞ்சி இருந்த தன்னைக் கேட்பினும் கொடுத்து விடுவான் என்ற செய்தியின் மூலம் ஈகையின் சிறப்பைப் புலப்படுத்துகின்றது. சங்க கால வேந்தர்கள் தன்னை நாடி வந்த மக்கள், புலவர் என அனைவருக்கும் வேற்றுமை பாராட்டாது விருந்தளித்தனர் என்பதை,

ஈ என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்,
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள் எனக் கொடுத்தல்
உயர்ந்தன்று; அதன் எதிர்,

கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று (புறம் - 204)

என்ற பாடலின் மூலம் ஒருவனிடம் சென்று யாசிப்பது எத்தனை இழிவானதோ அதை விடவும் இழிவானது யாசித்தவனுக்கு எதுவும் தராமல் மறுப்பது என்றும் அதைவிடவும் ஒருவன் யாசிப்பதற்கு முன்பே அவன் தேவையறிந்து கொடுத்து மகிழ்விப்பது மிகவும் உயர்ந்தது என்றும் குறிப்பிடுகின்றது. இக்கருத்திற்கேட்ப வேந்தர்கள் மக்கள் கேட்பதற்கு முன்பே கொடுத்தனர். பொருட்களைப் பெற்று மக்கள் மகிழ்வதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். இதன் அடிப்படையில் ஒருவருக்கு உணவு தருதலும், உதவி செய்தலும், யாசிப் போருக்கு யோசிக்காமல் தருவதும், சிறந்த அறத்தின் மாண்பாகக் கூறப்படுகின்றது.

போர் அறம்

அறத்தால் கிடைக்கின்ற இன்பம் நிலையானது. அரசியல் என்பது அறத்தை அடிப்படையாகக் கொண்டது. வீரமும் போர்ப்பண்பும் ஆடவர்க்குரிய உயர் பண்பாக சங்ககாலத்தில் கருதப்பட்டது. அதுபோல போர் புரியும் வீரர்களும் அரசர்களும் போரில் வெற்றி என்பது அறவழியில் வருகின்ற வெற்றியே நிலையானது என்று போர் அறத்தை மேற்கொண்டு வாழ்ந்தனர். இதனை,

கடுஞ்சினத்த கொல்களிறுங் கதல்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர் தேரும்
நெஞ்சுடைய புகழ் மறவரும்என
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம் (புறம் - 55)

என்ற பாடலில் ஒரு நாட்டை ஆளும் மன்னன் பலம் வாய்ந்த யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்ற நான்கு படைகளைக் கொண்டிருந்தாலும் உலகனைத்தையும் தன் ஒப்பற்ற ஒரே குடை நிழலில் ஆண்டாளும் அறநெறியை அடிப்படையாகக் கொண்டு வாழ்வது அரசனின் மாண்பு என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

மன்னர்கள் தங்கள் நிலையை விரிவுபடுத்திக் கொள்ள பிற நாட்டு மன்னருடன் போர் புரிந்தனர். போர் முறைகளுக்கும் இலக்கணம் வகுத்து அறமோடு வாழ்ந்தார்கள். சூரிய உதயத்தின் போது துவங்கும் போரானது மாலை சூரிய மறைவிற்குப் பிறகு தொடரக்கூடாது என்பது போரின் மரபாகும். சூரியன் மறையும் வரை மட்டுமே போர் நடைபெறும். பின் முரசறைந்து போரை நிறுத்துவர். எத்தனை நாள் போராயினும் இதுவே வழக்கமாக இருந்தது. போர் முனையில் தனக்கு ஒத்த வீரனாக இல்லாத போதும், புறமுதுகிட்டு ஓடும் போதும் பகைவர்களுடனும் போர் புரிவதை மறுத்தனர். பசுக்களும், பார்ப்பன மக்களும், பெண்டிரும், பிணி உடையோரும், புதல்வரை பெறாதவரும் பாதுகாப்பான இடங்களில் இருந்து கொள்ளுமாறு கூறிவிட்டு போருக்குச் செல்வது என்பது வழக்கம். இதனை,

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கபு னிறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவழும் பூட்கை (புறம் - 9)

எனும் பாடல் வழி அறிய முடிகின்றது. பகை மன்னர்களை வெல்வதே குறிக்கோளாகக் கொண்டார்களே தவிர உயிர்களைக் கொல்லும் எண்ணம் அவர்களுக்கில்லை. மறப்போரிலும் அறத்தைக் கடைபிடித்தனர். தற்போதைய நிலையில் நடைபெறும் போரானது அழிவிற்கே வழி வகுக்கின்றன. எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நடைபெறும் போர், குண்டு வெடிப்புகள், மறைந்திருந்து தாக்குதல் போன்ற பயங்கரவாதங்கள் மூலம் மக்களையும், நாட்டையும் அழிவிற்கு உள்ளாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். போர் அறம் என்பது இக்காலத்தில் அழிந்தும், மறைந்தும் வருவதைக் காண முடிகின்றது.

வணிகர்களின் அறம்

வணிகர்கள் உண்மையும் நேர்மையும் கொண்டவர்களாக விளங்கினர். அவர்கள் தங்கள் வளத்தைப் பெருக்கிய அதே நிலையில் நாட்டின் பொருளாதார வளமும் பெருகியதால் வணிகர்களை "அரசர் பின்னோர்" எனப் பெருமையுடன் அழைக்கப்பட்டனர். வணிகர்கள் நேர்மையாக அக வாழ்வை கடைபிடித்து அனைவரையும் சமமாக பாவித்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு துணை புரிந்து, கலாச்சாரத்தைப் பெருக்கி வந்ததால் அவர்களை அரசனுக்கு அடுத்தபடியாக மக்கள் மதித்தனர். அக்கால வணிகர்கள் அரசனுக்கு அடுத்த நிலையில் செழுமையாக வாழ்ந்தனர். உயிர்க்கொலையை செய்யாதவர்களாகவும், பிறரையும் செய்யாது தடுப்பவர்களாகவும் விளங்கினர். யாகங்களும் வேள்விகளும் நடத்தி இறைவனை வழிபட்டுச் சிறப்பான முறையில் நேர்மையுடன் வாழ்ந்தனர் என்பதை,

கிளை கழித்து பகை பேணாது
வலைஞர் முன்றில் மீன் பிறழவும் (பட்டினப்பாலை- 196 - 197)

என்ற பாடலடிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், வணிகர்கள் எவ்வாறு இனிமையான சொற்களைப் பேசி முகமலர்ச்சியோடு வாழ்ந்தனர் என்பதைத் திருவள்ளுவர்,

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன் சொல்லினதே அறம் (குறள்- 93)

என்ற குறள் மூலம் குறிப்பிடுகின்றார். வணிகர்கள் நாணயமாக வாழ்ந்தனர் என்பதை,

நெடு நுகத்துப் பகல் போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர் (பட்டினப்பாலை 206 - 207)

என்ற பாடலடிகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

முடிவுரை

பழந்தமிழர்களின் வாழ்வினை சங்க இலக்கியங்களின் மூலமாகத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது. பண்டையத் தமிழ் மக்கள் தனிமனிதனையும், சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். சங்க கால மக்களின் வாழ்வில் அக வாழ்வான இல்லறத்தின் சிறப்பையும் இல்லறத்தின் சிறந்த அறமாகக் கருதப்படும் விருந்தோம்பலின் சிறப்பையும் அறிந்து கொள்ள முடிகிறது. புறவாழ்வில் சிறப்பான ஆட்சி முறை நடைபெற அரசன் அறங்களைக் கற்றவனாக இருக்க வேண்டும். மேலும், போர் அறமும், வீரமும், ஈகைச் சிறப்பும் பெற்றிருந்தனர். சிறப்புமிக்க கல்வியின் முக்கியத்துவத்தையும், பிறருக்கு கொடுத்து உதவும் ஈகையின் மாண்பையும், நாட்டையும் மக்களையும் சிறப்புற காக்க மேற்கொள்ளப்படும் போரின் அறத்தையும், வணிக அறத்தையும் காண முடிகின்றது. பண்டைத் தமிழர்கள் மிகவும் நேர்மையாகவும், உன்னதத் தன்மையுடனும் வாழ்ந்து வந்துள்ளனர். போரில் வீரத்தை மட்டுமல்லாமல் அறத்தையும் பெரிதாகக் கொண்டு மதித்திருக்கிறார்கள் என்பதை இங்கே உணர்ந்து கொள்ள முடிகின்றது.

துணைநூற்பட்டியல்

குறுந்தொகை மூலமும் உரையும், சண்முகப்பிள்ளை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற் பதிப்பு - 1985.

சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும் (விளக்கவுரையாசிரியர்) புலவர் பி.ரா.நடராசன், திருமகள் நிலையம், சென்னை - 600 017.

திருக்குறள், சிற்பி பாலசுப்பிரமணியம், தாமரை பப்ளிகேஷன், சென்னை, முதற் பதிப்பு - 2012.
புறநானூறு மூலமும் உரையும், அ.ப.பாலையன், கௌரா பதிப்பகக் குழுமம், சென்னை- 600009, முதற் பதிப்பு - 2018.

References

Kurunthogai Moolamum Uraiyum. Shanmugapillai, Tamil University, Thanjavur, First Edition - 1985
Sanga Illakiyam, Pathupattu Moolamum Uraiyum, P.R.Nadarajan, Thirumagal Nilayam, Chennai - 600 017.
Thirukural, Sirpi Balasubramanian, Thamarai Publications, Chennai, First Edition - 2012.
Purananooru Moolamum Uraiyum. A.P.Palayan, Gowra Publications, Chennai - 600 009, Edition - 2018.